



# நகர் ஊரமைப்பு துறை (DTCP)

## மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் திருப்பூர் மாவட்டம்

## கொளத்துப்பாளையம் பேரூராட்சி

**திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம், கொளத்துப்பாளையம் பேரூராட்சி மற்றும் கிராமம், ரீ.ச.எண்:185/5A2,185/5A3-ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்க்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்.**

அளவு : 1: 500 (திட்டமில்லாப்பகுதி)

இணையதள விண்ணப்ப எண்: 5PTUEN94, Date: 01.08.2023

**குறிப்பு:**

மனைப்பிரிவின் பரப்பு : $0.67\frac{1}{2}$ ஏக்கர் (அ) 2731.00 ச.மீ

ஒதுக்கிய மனைகள் : 10

மனைப்பிரிவின் எல்லை........................................................................

நிலையிலுள்ள சாலை/அணுகு சாலை...................................................

**பொது ஒதுக்கீடுகள் (உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை):**

I. மனைப்பிரிவு சாலையின் பரப்பு : 202.41 ச.மீ

II.பூங்கா

(i) ஒதுக்கப்பட வேண்டிய பூங்கா பரப்பு : (மனைப்பிரிவின் பரப்பு - மனைப்பிரிவு சாலை பரப்பு)x10%

: (2731.00 - 202.41) x 10% = 252.86ச.மீ

(ii) TNCDBR 2019 விதி எண்.47(6)-ன்படி 252.86ச.மீ (10%) பூங்கா பரப்பிற்கு ஈடான அரசு வழிகாட்டி மதிப்பீட்டு தொகை ரூ.3,54,004.00/-னை உரிய அரசு கணக்கு தலைப்பில் 25.08.2023 அன்று செலுத்தியுள்ளார்)

III. பொது உபயோகம்

(A) LOCALBODY-க்கு ஒதுக்கப்பட வேண்டிய பரப்பு : (2731.00 - 202.41) x 0.5% = 12.64ச.மீ (0.50%)

ஒப்படைக்கப்பட்ட பரப்பு : 71.76ச.மீ (2.84%)

(B) TANGEDCO-க்கு ஒதுக்கப்பட வேண்டிய பரப்பு : (2731.00 - 202.41) x 0.5% = 12.64ச.மீ (0.50%)

ஒப்படைக்கப்பட்ட பரப்பு : 82.07ச.மீ (3.25%)

கட்டிட வரம்பு : 9.00மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.5மீ-ம் விடப்படல் வேண்டும்.
9.0மீ முதல் 18.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 3.0மீ-ம் விடப்படல் வேண்டும்.

மூலை முடக்கு : 12.00மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.5மீx1.5மீ-ம் விடப்படல் வேண்டும்.
12.0மீ முதல் 30.50மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 4.5மீx4.5மீ-ம் விடப்படல் வேண்டும்.

**நிபந்தனைகள்:**

1. அரசாணை எண்:18 ந.நி(ம)கு.வ.துறை நாள் 04.02.2019 மற்றும் அரசாணை எண்:16 ந.நி(ம)கு.வ.துறை நாள் 31.01.2020-ன் படி மனைப்பிரிவு சாலைகள் மற்றும் உள்ளாட்சிக்கான பொது உபயோக ஒதுக்கீட்டினை உள்ளாட்சிக்கும் TANGEDCO-க்கான பொது உபயோக ஒதுக்கீட்டீனை TANGEDCO அல்லது உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது.
2. அரசாணை எண்: 181 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள் 09.12.2020-ல் மற்றும் அரசாணை எண்:141, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள்:16.07.2022-ன் படி, உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தேவையான தார் சாலை வசதி, மழைநீர் வடிகால் வசதிகள், மேல்நிலைத்தொட்டி, தெருவிளக்கு வசதி மற்றும் இதர வசதிகள் ஆகிய அடிப்படைவசதிகளை மனுதாரரால் அமைக்கப்பட்டு, அதனை உள்ளாட்சியாள் உறுதி செய்த பின்னரே இறுதி ஒப்புதல் வழங்கபடல் வேண்டும்.
3. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தினை எந்தத்துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும். எந்தத் துறைக்காகவும் நில ஆர்ஜிதப் பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும் உள்ளாட்சி உறுதி செய்ய வேண்டும்.
4. நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால். மனைப்பிரிவுக்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கியதில் ஏதேனும் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில் நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களால் இரத்து செய்யப்படும்.
5. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத் துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடங்களையும் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
6. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைப்படத்தினை எவ்வித மாற்றமும். விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 0.6மீ x 1.2மீ அளவிலான நிரந்தர தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப் படவேண்டும்.
7. உத்தேச மனைப்பிரிவு சாலைகள் தார் சாலைகளாக அமைக்கப்பட்ட பின்னர், உத்தேச சாலைகளின் தரம் குறித்து உள்ளாட்சி பொறியாளரிடமிருந்து தகுதிச் சான்று பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.
8. மனைப்பிரிவின் குருக்கே செல்லும் குறைந்தழுத்த மின் கம்பி பாதையை சாலையின் போக்கிற்கேற்ப மனுதாரரின் சொந்த செலவில் மாற்றியமைத்துக் கொள்ள வேண்டும்.

**SWP / DTCP / TIRUPPUR / LAYOUT NO: 250/2023**

கு.அருண்குமார்
அளவர்/உதவி வரைவாளர்

க.பத்மா
மேற்பார்வையாளர்

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
திருப்பூர் மாவட்டம்

Signature Not Verified